ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# முத்தொள்ளாயிரத்தில் தமிழரின் பழக்கவழக்கங்கள்

**முனைவர் சு.அனுலெட்சுமி**

**உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை**
**புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி**
**திருச்சிராப்பள்ளி – 02**

anuganeshan2018@gmail.com

13

**ஆய்வுச்சுருக்கம்**

ஒரு சமுதாயத்தில் வாழும் மக்களின் வாழ்க்கை அமைப்பு முறையின் வெளிப்பாடே பண்பாடாகிறது. வாழ்க்கை அமைப்பு என்பது அச்சமுதாயத்தின் பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், மரபுகள், கலைகள், இலக்கியங்கள் முதலியவற்றால் அறியப்பட முடிகின்றன. பண்பாடென்பது ஒரு தலைமுறையினரிடம் பெற்றுக்கொண்ட வாழ்க்கை முறையாகும். ஒரு சமுதாயத்தின் பண்பாட்டை அறிந்து கொள்வதற்குப் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும் அடிப்படைக் கருவிகளாக அமைகின்றன. முத்தொள்ளாயிரத்தில் நாம் இன்றளவும் கடைப்பிடிக்க கூடிய பல வழக்கங்கள் நடைமுறையில் இருப்பதையும் அவை இன்றளவும் நாம் பின்பற்றக் கூடிய நிலையினையும் அறியமுடிகிறது.

**திறவுச்சொற்கள்:** நுதல் -நெற்றி, திலகம்-பொட்டு, களிறு-யானை, அரவு-பாம்பு, புல்லாதார்- பகைவர்

**முன்னுரை**

முத்துள்ளாயிரம் கால வெள்ளத்தில் மறைந்து போன தமிழ் நூல்களில் ஒன்று. தமிழகத்தில் மூவேந்தர்களும் எந்தக் காலத்திலும் இணைந்து செயல்படாத ஒரு வரலாற்றுச் சூழலில் மூவேந்தர்களையும் ஒத்த நிலையில் இணைத்துப் பாட்டுடை தலைவனாக கொண்டு இலக்கியம் படைக்க வேண்டும் என்ற ஆசிரியரின் எண்ண வோட்டத்தின் விளைவாக மலர்ந்தவை முத்தொள்ளாயிரம் ஆகும். இவற்றில் அகம், புறம் என்ற இரண்டு பொருண்மையிலும் பாடல்கள் அமைந்துள்ளன.

மக்களின் அன்றாட நிகழ்வுகளை சுட்டுவதோடு வாழ்வியல் கூறுகளையும், பண்பாட்டு பழக்கவழக்கங்களையும் பறைசாற்றவும் தவறவில்லை. சடங்குகளும், நம்பிக்கைகளும் மக்களிடம் அசைக்க முடியாத வாழ்வோடு பின்னிப் பிணைந்துள்ளன. அன்றையச் சூழலில் நிலவிய வழக்கங்களை இலக்கியங்களில் பதிவிடவும் மறக்கவில்லை அவ்வாறு முத்தொள்ளாயிரத்தில் காணலாகும் வழக்காறுகளை ஆய்வதை கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

**சிற்றிலக்கிய வகைகள் தொள்ளாயிரம்**

முத்தொள்ளாயிரம் என்ற நூற்பெயரில் உள்ள தொள்ளாயிரம் என்பது ஒருவகை சிற்றிலக்கியமாகும். தமிழில் **‘வச்சத் தொள்ளாயிரம்’**, **‘அருமை தொள்ளாயிரம்’** முதலான நூல்கள் பற்றிய குறிப்பினை இலக்கண உரையாசிரியர்களின் வழி அறிய முடிகின்றது. தொள்ளாயிரம் என்ற சிற்றிலக்கிய வகை எண் செய்யுள் என்று பட்டியல் நூல்களில் குறிப்பிடும் இலக்கிய வகையில் ஓர் உட்பிரிவாக கூட இருக்கலாம்.

**"ஊரையும் பேரையும் உவந்தெண்ணாலே**

**சீரிதிற் பாடல் எண் செய்யுளாகும்" 1 (இ.வி.பாட்டியல்.நூ.88)**

என்னும் இலக்கண விளக்கப்பாட்டியல் எண் செய்யுள் என்ற நூற்பாவிற்கு எழுதியுள்ள உரையில் பாட்டுடைத் தலைவனின் ஊரையும் பெயரினையும் உவந்து எண்களால் பத்து முதல் ஆயிரம் அளவிற்கு பொருட்சிறப்பினால் பாடுதலே எண் செய்யுளாம் அவ்வாறு பாடப்பட்டவையே முத்தொள்ளாயிரம் என்று முந்நூறு பாடல் வீதம் மூவேந்தர்களுக்கும் தொள்ளாயிரம் பாடல்களால் பாடப்பட்டதே இதன் சிறப்பாகும்.

**கள் உண்ணுதல்**

மது என்பது பண்டைய தமிழர்களிடம் இவ்வழக்கமானது மிகுந்து காணப்பட்டன. சங்க காலத்தில் அரசரும், மறவரும், புலவரும், கூத்தரும், பெண்டிரும் உழவரும், பான வகைகளில் கள்ளையே சிறந்த பானமாக உட்கொண்டதற்கு இலக்கியங்கள் சான்று பகிர்கின்றன. கள் தடை செய்யப்பட்ட பானமாக இல்லாமல் அன்றைய வாழ்வியல் சூழலில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு பானமாக இருந்தது.

**"களிகள் களிகட்கு நீட்டத்தங் கையாற்**

**களிகள் விதிர்த்திட்ட வெங்கட் டுளிகலந்" 2 (முத் - 4)**

கள் விற்பனை செய்பவர்கள் கள் உண்பவர்களுக்கு கொடுத்தனர் அதனை பெற்றுக் கொண்ட கள் குடியர்கள் கள்ளின் மேற்புறம் இருக்கும் நுரை முதலியவற்றை எறிந்தனர் என்ற செய்தியை முத்தொள்ளாயிரம் பாடலில் காணலாகிறது. கள் உண்ணும் வழக்கம் அக்காலக் கட்டத்தில் நிலவிய தன் பாங்கினை புலவர்கள் தங்களின் பல்வேறு இலக்கியங்களில் பதிவிடவும் தவறவில்லை.

**பலியிடுதல்**

இலக்கியங்களில் காணப்படுகின்ற இயற்கை வழிபாட்டு முறைகளே முன்னோர் வழிபாட்டின் தொடக்க நிலையாக அமைந்திருந்தன. இயற்கையை வழிபட்ட மனிதன் அதை ஊர்ப் பொது இடங்களில் மன்றங்கள் அமைத்து பலியிட்டு வழிபடத் தொடங்கினான். தெய்வம் உறையும் இடமாக மரத்தையும் வழிபடத் தொடங்கினான் அவ்வழிபாட்டின் நீட்சியே பல சடங்குகளும், வழக்கங்களும் உருப்பெற்றன.

**"காராட் டுதிரந்தூஉ யன்னை களனிழைத்து**

**நீராட்டு நீங்கென்றால் நீங்குமோ – போராட்டு"3 (முத் - 20)**

என் நெஞ்சில் வளர்ந்த காதல் நோய் அவனால் நீங்குமே தவிர அன்னை வெறியாடும் களம் அமைத்து கரிய ஆட்டின் ரத்தத்தையும், பொரியையும் தூவி என்னை நீராட்டி நீங்கிப் போ என்றாள் இப்பாடலில் பலியிடுவதற்காக ஆட்டின் ரத்தத்தினையும் அதில் பொரியையும் தூவி வழிபடும் சடங்குகளை ஆசிரியர் குறிப்பிட்டுள்ளதை காண முடிகிறது.

**பொட்டு வைத்துக் கொள்ளுதல்**

சங்க காலம் தொடங்கி தற்காலம் வரை பெண்ணினத்திற்கென்றே இந்த ஆணாதிக்க சமூகம் பல பழக்க வழக்கங்களையும், சடங்குகளையும் கடைபிடித்து வருகின்றன. இதில் பெண்களை மையமிட்டு அனைத்தையும் நடத்துகின்றனர் அவர்களின் தேவைகளை தானே தேர்ந்தெடுக்க முடியாமல் பல இன்னல்களுக்கும் சமூகத்திற்கும் கட்டுப்பட்டு வாழ்வதோடு பெண்களிடம் பல பழக்க

வழக்கங்களை திணித்து உள்ளனர்.

**"திலகங் கிடந்த திருநுதலா யஃதால்**

**உலகங் கிடந்த இயல்பு" 4 (முத் - 21)**

இப்பாடலில் பெண்கள் தங்களின் நெற்றியில் பொட்டு அணிந்த வழக்கத்தினை காண முடிகிறது. பொட்டு என்பது மகளிர்க்குரியதாகவும் அதனை இளம் பெண்கள் திருமணமானவர்கள், கணவனுடன் வாழ்பவர்கள் மட்டுமே வைக்க வேண்டும் என்ற வழக்கமானது பிற்காலத்தில் தொடங்கி இன்றளவும் நடைமுறையில் காணப்படுவதை நம்மால் அறிய முடிகின்றன.

**மங்கல நாண் களைதல்**

மகளிர்க்குரிய பல சடங்குகளில் கணவனை இழந்த பெண்களுக்கு நடத்தப்படும் சடங்குகள் எண்ணற்றவை. அதுவரை சுமங்கலியாக கருதியவளை கணவன் இறந்ததும்

**"கானி மிர்த்தால் கண்பரிப் வல்லியோ புல்லாதார்**

**மானனையார் மங்கலநாண் அல்லவோ" 5 (முத் - 32)**

சோழனோடு நட்பு கொள்ளாத பகை மன்னர்களின் மனைவியரின் மங்கல நாணும் அறுபட்டு விழும் என்ற செய்தி முத்தொள்ளாயிரத்தில் காணலாகிறது. கணவனை இழந்தால் அவன் அணிந்துள்ள மங்கலநாணை துறக்க வேண்டும் என்பது சாதாரண குடிகளுக்கு மட்டுமில்லை அரசியர்களுக்கும் இவ்வழக்கமானது பொருந்தும் என்பதை இவ்வடிகள் சுட்டுகின்றன.

**பிறந்தநாள் விழா**

மன்னர்களின் பிறந்த நாளினை அந்நாட்டு குடிமக்களோடு சேர்ந்து கொண்டாடுவதையே அரசர்கள் பெரிதும் விரும்பி உள்ளனர்.

**"அந்தணர் ஆவோடு பொன் பெற்றார் நாவலர்**

**மந்தரம் போல் மாண்ட களிறூந்தார்" 6 (முத் - 44)**

**"தேர்வேந்தன் றென்னன் திருவுத்திராட நாட்**

**போர் வேந்தன் பூசலிலன்"7 (முத் - 75)**

அரசன் பிறந்த தினத்தில் அந்தணர்களுக்கு பசுக்களையும், பொன்னையும் கொடுத்ததோடு மந்தார மலை போன்ற யானைகளையும் கல்வியில் புலமைமிக்க புலவர்களுக்கு கொடுத்தான். மேலும் அரசர்கள் பிறந்த நாளில் பகை மன்னனோடு போர் செய்ய மாட்டார்கள் இவ்வாறு அரசர்கள் தங்களின் பிறந்தநாளுக்கு முக்கியத்துவம் கொடுத்ததோடு அதை குடிமக்களோடு சேர்ந்து கொண்டாடும் மரபினையும் கடைப்பிடித்து வந்துள்ளமையினை; அடிய முடிகிறது.

**வரி செலுத்துதல்**

ஒவ்வொரு நாட்டின் குடிமகனும் தன் நாட்டின் அரசாங்கத்திற்கு நேரடியாகவோ, மறைமுகமாகவோ ஒரு குறிப்பிட்ட தொகையினை கட்டாயம் செலுத்த வேண்டியுள்ளது. இவ்வாறு அரசுக்கு செலுத்தப்படும் தொகையினை வரி என்றும் இவை அரசிற்கு வரும் வருவாயில் தவிர்க்க இயலாத பகுதியாக மாறியும் உள்ளன. சங்க கால ஆட்சியாளர்களின் வருவாய் இனத்தில் நிலவரி முதலிடம் பெற்று இருந்தது.

**“அரவக லல்குலாய் ஆறிலான் அன்றோ**

**புரவலர் கொள்ளும் பொருள்”8 (முத் - 51)**

நாட்டில் வாழும் மக்களின் உற்பத்திப் பொருளில் ஆறில் ஒரு பங்கு தானே நாடாளும் மன்னர்களுக்கு கொடுக்கப்படும் திறைப்பொருள் என்று முத்தொள்ளாயிரம் குறிப்பிடுவதை காண முடிகிறது. இதில் மன்னர்கள் குடிகளின் விளைச்சல் பொருளை வரியாக கொண்ட விதமும் காணப்படுகிறது. அதிலும் குறிப்பாக வரிச்சுமையினை அதிகமாக மக்கள் மேல் சுமத்தாமல் குடிகளின் நலன்களை கருதி அளவில் குறைவான வரி வாங்கப்பட்டமை தெளிவாகிறது. அதிலும் வரிக்குரிய காசு, நாணயம் போன்றவைகளை குறிப்பிடாமல் விளைச்சலில் கிடைக்கும் பொருளையே வரியாக செலுத்திய பங்கினை அறிய முடிகிறது.

**பறை அறிவித்தல்**

பறை என்பது பழந்தமிழர்களின் இசைக்கருவிகளில் ஒன்று பறை என்பதன் மற்றொரு பொருள் சொல்லுதல், அறிவித்தல், பறைசாற்றுதல் எனவும் பொருள்படும். நூற்றுக்கு மேற்பட்ட பறை இசைக்கருவிகள் தமிழர்களின் வாழ்வியலோடு பின்னிப் பிணைந்து இருக்கின்றன. வெற்றி வாகை சூடும்போதும், போருக்கு புறப்படும் போதும், திருவிழாவின்போதும், முன்னறிவிப்பிற்காக பறை இசைக்கருவி இசைக்கப்பட்டன.

**“பறைநிறை கொல்யானைப் பஞ்சவர்க்குப் பாங்காய்த்**

**திறைமுறையி னுய்யாதார்; தேயம்;” 9 (முத் - 89)**

பறையினை அறைவதற்கென்று மக்கள் இருந்தனர். மன்னன் வரவை மக்களுக்கு அறிவிப்பதற்காக இப்பறை இசைக்கருவியினை இசைத்து மக்களுக்கு தெரிவித்த முறைமையினை அறிய முடிகிறது.

**கூடல் இழைத்தல்**

கூடல் இழைத்தல் என்பது சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ள திருமணம் தொடர்பான நம்பிக்கை தலைவனிடம் காதல் கொண்ட பெண் கண்களை மூடிக்கொண்டு தன் விரலால் மணலில் வட்டமாக வரைய விரல் தொடங்கிய இடத்தில் வந்து வட்டமானது முடிந்தால் தலைவி நினைத்தது நடக்கும் என்றும், சரியாக வட்டமானது பொருந்தாமலும், இணையாமலும் இருந்தால் அவள் நினைத்தது நடக்காது என்று நம்பினர்

**“கூடலாக்கிடும் குன்றின் மணற் கொடு” 10 (தேவாரம் - 1714)**

**“ஆழி திருத்திச் சூழிக் கணக்கு” 11 (தி.கோ.186)**

**“அண்டமும் நிலனும் ஆடி ஒன்றினால்**

**கொண்டவன் வரில் கூடிடு கூடலே” 12 (நா.திரு – 48)**

என்ற இலக்கியங்கள் கூடல் இழைப்பதை சுட்டுகின்றன.

**“கூடப் பெறுவேனேல் கூடென்று கூடல்**

**இழைப்பாள் போற் காட்டி யிழையா திருக்கும்” 13 (முத் - 99)**

கூடல் சுழி கூட வேண்டும் என்று வேண்டிக்கொண்டு ஒரு வேளை கூடல் இழைத்தல் சுழி இணையாமல் போனால் பாண்டியனை கூடும் வாய்ப்பு கிடைக்காதோ என்று எண்ணி சுழியை சுழிப்பது போல் பாவனை காட்டிக் கொண்டு தலைவியானவள் அமர்ந்திருக்கும் உளநிலையினை காட்சிப்படுத்தியிருக்கிறார் ஆசிரியர்.

**முடிவுரை**

பழந்தமிழர்களின் பழக்கவழக்கங்கள் அனைத்தும் மனித இனத்திற்கு மிகவும் நன்மை பயப்பதாகவும், காலம் தோறும் பின்பற்றக் கூடியதாகவும் உள்ளன. தமிழர்கள் அறத்தையே அனைத்து உயிரினங்களுக்கும் அடிப்படையாகக் கொண்டு வாழ்ந்தனர் எல்லோரும் வாழ வேண்டும் என்பது தமிழரின் பொது நோக்கமாகும். அன்றாட வாழ்க்கையில் தொடங்கி அரசியல் நிர்வாகம் வரை அனைத்திலும் சில பண்பாட்டு வழக்கங்களை தவறாது கைப்பிடித்து வந்துள்ளனர்.

**சான்றெண் விளக்கம்**

1. கதிர் முருகு(உ.ஆ),முத்தொள்ளாயிரம் மூலமும் உரையும்,ப.5
2. மேலது,ப.21
3. மேலது,ப.22
4. மேலது,ப.43
5. மேலது,ப.72
6. மேலது,ப.85
7. புலவர் பி.ரா.நடராசன்(உ.ஆ).,தேவாரம் மூலமும் உரையும்.,ப.185
8. புலவர் பி.ரா.நடராசன்(உ.ஆ).,திருக்கோவையார் மூலமும் உரையும்.,ப.372
9. துரை.தண்டபாணி(உ.ஆ).,நாச்சியார் திருமொழி மூலமும் உரையும்., ப. 35

**பார்வை நூல்கள்**

1. இளங்குமரன் - இலக்கண வரலாறு
மணிவாசகர் பதிப்பகம், சென்னை
முதற் பதிப்பு – 2009

2. கதிர் முருகு - முத்தொள்ளாயிரம் மூலமும் உரையும்
சாரதா பதிப்பகம், ராயப்பேட்டை,
சென்னை – 14
முதற்பதிப்பு – 2007

3. தண்டபாணி. துரை - நாச்சியார் திருமொழி மூலமும் உரையும்
சகுந்தலை நிலையம், பவளக்காரத் தெரு
மண்ணடி, சென்னை – 01
முதற்பதிப்பு – 2003

4. நடராசன் பி.ரா - திருக்கோவையார் மூலமும் உரையும்
உமா பதிப்பகம், மண்ணடி
சென்னை – 01
முதற்பதிப்பு – 2006

5. நடராசன் பி.ரா - தேவாரம் மூலமும் உரையும்
உமா பதிப்பகம், மண்ணடி
சென்னை – 01
முதற்பதிப்பு - 2006